சார்பு நீதிமன்றம், இராஜபாளையம்

அசல் வழக்கு எண். 533/2024 நாள்-17.06.2026

**<u>பி.வா.சா.1. சித்ராதேவி</u>**

**<u>குறுக்கு விசாரணை வாதி தரப்பில்</u>**

நான் வாதியிடம் அலுவலக பணியாளராக பணிபுரிந்து வந்தேன் என்று சொன்னால் சரிதான் வழக்கில் கண்ட சொத்தை நான் வாதி மூலமாக கிரையம் பெற்றேன் என்றால் சரிதான். அதற்காக வாதியிடம் ரூ.8 லட்சம் கடன் வாங்கியிருந்தேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 அடமானப்பத்திரத்தை வாதி பெயருக்கு எனக்கு தெரிந்தே எழுதிக் கொடுத்தேன் என்றால் சரிதான் . வா.சா.ஆ.1-ல் வட்டிக்கு கடன் கொடுத்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ.1- பத்திரத்தில் அந்த கடனுக்கு ஆதரவாக காசோலை கொடுத்ததாக சொல்லப்படவில்லை என்றால் சரிதான். வாதிக்கு நான் காசோலை கொடுத்தேன் என்று காட்டுவதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை சரவணக்குமார் என் உடன் பிறந்த சகோதரர் என்றால் சரிதான். என் சகோதரர் காசோலையை எந்த இடத்தில் வைத்து யார் முன்னிலையில் கொடுத்தேன் என்று என் நிரூபணவாக்குமூலத்தில் கூறவில்லை என்றால் சரிதான். ரூ.5 லட்சம் நான் வாங்கிய அடமானக் கடனுக்காகத்தான் திருப்பி செலுத்தப்பட்டது என்று காட்டுவதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை. ரூ.5 லட்சத்திற்கான காசோலையை நான் வாதியிடம் கொடுத்தேன் என்று காட்டுவதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை. என் சகோதரர் சரவணக்குமாருக்கும், வாதிக்கும் பழக்கம் உள்ளது என்றால் சரிதான். அந்த பழக்க வழக்கத்தின் அடிப்படையில் என் சகோதரர் வாதியிடம் பெற்ற கடனை திருப்பி செலுத்துவதற்காகத்தான் அந்த காசோலையை வாதியிடம் என் சகோதரர் கொடுத்தார் என்றால் சரியல்ல. ரூ.5 லட்சம் காசோலையில் கண்ட தொகைக்கும் இந்த வழக்கு அடமானத் தொகைக்கும் சம்பந்தம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. சுமதி வாதியின் சித்தப்பா மகள் என்று காட்டுவதற்கு எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை. சுமதி என்பவர் யார் மூலம், எத்தனை வருடங்களாக பழக்கம் என்று நிரூபணவாக்குமூலத்தில் கூறவில்லை. சுமதிக்கு நான் ரூ.2 லட்சம் பணம் கொடுத்ததற்கான ஆவணங்கள் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். சுமதிக்கு எந்த இடத்தில் யார்

சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டி சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

ஒப்பம் .திரு.M.சண்முகவேல்ராஜ்,B.A.,B.L.,L.L.M.,
இராஜபாளையம்.

முன்பாகபணம் கொடுத்தேன் என்று நிரூபணவாக்குமூலத்தில் கூறவில்லை என்றால் சரியல்ல. நான் பணம் கொடுத்ததாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் வாதிக்காக பாஸ்கர் என்பவரிடம் ரூ.1 லட்சம் பணம் கொடுத்தேன் என்று காட்டுவதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை. பாஸ்கர் என்பவரிடம் நான் எந்த காலத்திலும் பணம் கொடுக்கவில்லை என்றும் பணம் கொடுத்ததாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் பணம் திருப்பிக் கொடுத்ததாக சொல்லப்படும் காலக்கட்டத்தில் வாதி மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தார் என்று காட்டுவதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்யும் வரைக்கும் வாதிக்கு எவ்வித உடல்நலக்குறைபாடு ஏற்படவில்லை என்றும் வாதியிடம் பெற்ற தொகையை மோசடி செய்வதற்காக பொய்யாக கூறுகிறேன் என்று சொன்னால் சரியல்ல. விவேகானந்தன் வாதியின் நண்பர் என்று காட்டுவதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை. விவேகானந்தன் என் மீது காசோலை வழக்கு தாக்கல் செய்து அந்த வழக்கை வாபஸ் பெற்றுக் கொண்டார் . அந்த வழக்கு சம்பந்தபட்ட ஆவணங்களை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை. அந்த வழக்கின் உத்தரவை தாக்கல் செய்தால் தான் எதன் அடிப்படையில் முடிக்கப்பட்டது என்ற விவரம் தெரியும் என்று சொன்னால் சரியல்ல. விவேகானந்தன் என்பவர் வாதிக்கு யார் என்று தெரியாது என்றும் விவேகானந்தனுக்கும் எனக்கும் நடைபெற்ற வரவு செலவு பற்றி வாதிக்கு தெரியாது என்றால் சரியல்ல வாதிக்கு எந்த காலத்திலும் காசோலை வழங்கியது இல்லை என்று சொன்னால் சரியல்ல. சரவணக்குமார் கொடுத்த ரூ.5 லட்சம் அவருக்கான கடனுக்கானது என்றும், எனக்கான கடனை சரவணக்குமார் திருப்பி செலுத்தவில்லை என்று சொன்னால் சரியல்ல. சுமதி, பாஸ்கர் ஆகியோர்களுக்கு நான் எந்த காலத்திலும் பணம் கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. வாதியிடம் வாங்கிய கடனுக்கு பணம் திருப்பி செலுத்தியிருந்தால் நான் ரசீது பெற்றிருப்பேன் என்றும் கொடுக்காத காரணத்தினால் தான் ரசீது பெறவில்லை என்றால் சரியல்ல. வாதி மீது இந்த வழக்கு தாக்கல் செய்த பிறகு தான் காவல் நிலையத்தில் புகார் செய்தேன் என்று சொன்னால் விவேகானந்தன் காசோலை வழக்கு தாக்கல் செய்ததற்கு பின்பு புகார் கொடுத்தேன். அந்த புகார் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்று கேட்டால் விசாரித்த பின்பு நீதிமன்றம்

சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டி சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

ஒப்பம் .திரு.M.சண்முகவேல்ராஜ்,B.A.,B.L.,L.L.M.,
இராஜபாளையம்.

மூலம் பரிகாரம் தேடிக் கொள்ள கூறிவிட்டார்கள். வாதிஅரட்டல் மிரட்டல் செய்வதற்காக வேண்டி பொய்யாக புகார் கொடுத்தேன் என்றும் அந்த புகாருக்கும் வாதிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றும் அடமானக் கடன் தொகையை வட்டியுடன் செலுத்த நான் கடமைப்பட்டவர் என்று சொன்னால் சரியல்ல.

சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டி சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

ஒப்பம் .திரு.M.சண்முகவேல்ராஜ்,B.A.,B.L.,L.L.M.,

இராஜபாளையம்.